09 JAN 2012
001694
சென்னை-600 005

NHSDP-1

(129)

சுருக்கம்

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் – இராஜீவ் வீட்டு வசதி திட்டம் – இராஜீவ் வீட்டு வசதி திட்டத்தை செயல்படுத்த மாநில அளவிலான வழிநடத்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணித்தல் குழுவினை மாற்றியமைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (குமா1(2)) துறை

அ.ஆ.(நிலை) எண்:02 நாள்: 02.01.2012

படிக்கபட்டது:

1. அரசு ஆணை (நிலை) எண் 176, வீ.வ.(ம) ந.வ. (கு.மா.1–2) துறை, நாள் 29.7.2010.
2. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய மேலாண்மை இயக்குநரின் கடித எண்.RCM6/10662/2010 நாள் 1.7.2011.

- - -

**ஆணை:**

பார்வை 1ல் படிக்கப்பட்ட அரசாணையில் இராஜீவ் வீட்டுவசதி திட்டத்தினை தமிழ்நாட்டில் சென்னை மற்றும் மதுரை மாநகரங்களில் செயல்படுத்த, குடிசைகள் வாரியாகவும், மண்டல வாரியாகவும், மற்றும் நகர வாரியாகவும் குடிசைகளின் சமூக பொருளாதார கணக்கெடுப்பும், புவியியல் தகவல் முறை மற்றும் வரைபடமெடுத்து திட்ட நடவடிக்கை அறிக்கைக்கு ஒப்புதல் அளித்து மைய அரசின் ஒப்புதல் பெற, கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்ட வழிநடத்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணித்தல் குழுவினை அமைத்து அரசு ஆணை பிறப்பித்திருந்தது.

| | | |
|---|---|---|
| 1 | மாண்புமிகு துணை முதலமைச்சர் | தலைவர் |
| 2 | மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இடவசதி கட்டுப்பாட்டு அமைச்சர் | துணைத்தலைவர் |
| 3 | வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறைச் செயலாளர் | உறுப்பினர் |
| 4 | நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளர் | உறுப்பினர் |
| 5 | நிதித்துறைச் செயலாளர் | உறுப்பினர் |
| 6 | திட்ட வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறைச் செயலாளர் | உறுப்பினர் |
| 7 | தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய மேலாண்மை இயக்குநர் | உறுப்பினர் – கூட்டுநர் |
| 8 | சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் வாரிய மேலாண்மை இயக்குநர் | உறுப்பினர் |
| 9 | சென்னை மாநகராட்சி ஆணையர் | உறுப்பினர் |
| 10 | நகர நிர்வாக இயக்குநர் / ஆணையர் | உறுப்பினர் |
| 11 | பேரூராட்சிகளின் இயக்குநர் | உறுப்பினர் |
| 12 | தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தலைவர் / மேலாண்மை இயக்குநர் | உறுப்பினர் |

2. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய மேலாண்மை இயக்குநர், இராஜீவ் வீட்டுவசதி திட்டத்தினை தமிழ்நாட்டில் செயல்படுத்த மைய அரசு சென்னை மற்றும் மதுரை மாநகரங்களை தேர்வு செய்துள்ளது என்றும், இத்திட்டத்தை செயல்படுத்த தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய மேலாண்மை இயக்குநர் ஒருங்கிணைப்பு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார் என்றும், தற்போது சென்னை மற்றும் மதுரை மாநகரங்களில் மேற்கண்ட திட்டத்தை செயல்படுத்த குடிசைகள் வாரியாகவும், மண்டல வாரியாகவும் மற்றும் நகர வாரியாகவும், குடிசைகளின் சமூக பொருளாதார கணக்கெடுப்பும், புவியியல் தகவல் முறை மற்றும் வரைபடமெடுத்து திட்ட நடவடிக்கை அறிக்கையினை நிதியுதவி பெற மைய அரசுக்கு அனுப்பப்பட வேண்டியுள்ளது என்றும் இத்திட்ட நடவடிக்கை அறிக்கை மாநில அளவிலான வழி நடத்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணித்தல் குழுவின் ஒப்புதல் பெற்று அவற்றை மைய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்க வேண்டும் என்றும் பார்வை 1–ல் படிக்கப்பட்ட அரசாணையில் அமைக்கப்பட்ட வழி நடத்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணித்தல் குழு கூட்டப்பட முடியாததால், கீழ்க்கண்டவாறு அக்குழுவினை மாற்றியமைக்க வேண்டுமென தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய மேலாண்மை இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.:-

| | | |
|---|---|---|
| 1 | மாண்புமிகு முதலமைச்சர் | தலைவர் |
| 2 | மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் | துணைத்தலைவர் |
| 3 | வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறைச் செயலாளர் | உறுப்பினர் |
| 4 | நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளர் | உறுப்பினர் |
| 5 | நிதித்துறைச் செயலாளர் | உறுப்பினர் |
| 6 | வருவாய்த் துறைச் செயலாளர் | உறுப்பினர் |
| 7 | தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தலைவர் / மேலாண்மை இயக்குநர் (TWAD Board) | உறுப்பினர் |
| 8 | சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய தலைவர் (ம) மேலாண்மை இயக்குநர் | உறுப்பினர் |
| 9 | சென்னை மாநகராட்சி ஆணையர் | உறுப்பினர் |
| 10 | நகர நிர்வாக இயக்குநர் / ஆணையர் | உறுப்பினர் |
| 11 | பேரூராட்சிகளின் இயக்குநர் | உறுப்பினர் |
| 12 | தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய மேலாண்மை இயக்குநர் | உறுப்பினர் (ம) கூட்டுநர் |

3. மேற்காணும் கருத்துருவை அரசு நன்கு ஆய்வு செய்து, இராஜீவ் வீட்டுவசதி திட்டத்தினை தமிழ்நாட்டில் சென்னை மற்றும் மதுரை மாநகரங்களில் செயல்படுத்த, குடிசைகள் வாரியாகவும், மண்டல வாரியாகவும், மற்றும் நகர வாரியாகவும் குடிசைகளின் சமூக பொருளாதார கணக்கெடுப்பும், புவியியல் தகவல் முறை மற்றும் வரைபடமெடுத்து திட்ட நடவடிக்கை அறிக்கைக்கு ஒப்புதல் அளித்து மைய அரசின் ஒப்புதல் பெற, மாண்புமிகு நிதித்துறை அமைச்சர்

தலைமையில், கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்ட வழிநடத்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணித்தல் குழுவினை அமைத்து அரசு ஆணையிடுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் | தலைவர் |
| 2 | மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் | துணைத்தலைவர் |
| 3 | வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறைச் செயலாளர் | உறுப்பினர் |
| 4 | நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளர் | உறுப்பினர் |
| 5 | நிதித்துறைச் செயலாளர் | உறுப்பினர் |
| 6 | வருவாய்த் துறைச் செயலாளர் | உறுப்பினர் |
| 7 | தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தலைவர் / மேலாண்மை இயக்குநர் (TWAD Board) | உறுப்பினர் |
| 8 | சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய தலைவர் (ம) மேலாண்மை இயக்குநர் | உறுப்பினர் |
| 9 | சென்னை மாநகராட்சி ஆணையர் | உறுப்பினர் |
| 10 | நகர நிர்வாக இயக்குநர் / ஆணையர் | உறுப்பினர் |
| 11 | பேரூராட்சிகளின் இயக்குநர் | உறுப்பினர் |
| 12 | தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய மேலாண்மை இயக்குநர் | உறுப்பினர் (ம) கூட்டுநர் |

/ஆளுநரின் ஆணைப்படி/

தேபேந்திரநாத் சாரங்கி,
அரசு தலைமைச் செயலாளர்.

பெறுநர்
மாண்புமிகு நிதியமைச்சர், தலைமைச் செயலகம், சென்னை—9
மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர், தலைமைச் செயலகம், சென்னை — 9.
அரசு செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, சென்னை—9
அரசு செயலாளர்,நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை—9.
அரசு செயலாளர், நிதித்துறை, சென்னை—9
அரசு செயலாளர், வருவாய்த் துறை, சென்னை—9
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், சென்னை—5.
மேலாண்மை இயக்குநர், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வாரியம், சென்னை—2
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை—2
நகர நிர்வாக ஆணையர் / இயக்குநர், சென்னை—5.
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை—108
மேலாண்மை இயக்குநர் / தலைவர்,
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை—5.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

சீ.[illegible]
பிரிவு அலுவலர்.
2/07/2012